**கம்புவின் விலை நிலையாக இருக்கும்**

கம்பு ஒரு முக்கிய தானிய உணவு, தீனி மற்றும் தீவனப்பயிராக பயிரிடப்படுகிறது. இவை வறட்சியை தாங்கி வளரும் தானியங்களில் முக்கிய பயிராக உள்ளது. சத்துமாவு தயாரிப்பில் கம்பு முக்கிய மூலப்பொருளாக உள்ளது. வேளாண் அமைச்சகத்தின், நான்காம் முன் மதிப்பீட்டின் படி, 2015-16 ஆம் ஆண்டில், 7.31 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 8.06 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்தாண்டு உற்பத்தியை விட 12 சதவீதம் குறைவாகும். இராஜஸ்தான், உத்திர பிரதேசம், குஜராத் மற்றும் அரியானா ஆகியவை கம்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இவை நாட்டின் மொத்த உற்பத்தியில் 83 சதவிகிதம் பங்களிக்கிறது.

தமிழ்நாட்டில் கம்பு 0.58 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1.77 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கம்பு உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. இதைத் தொடர்ந்து தூத்துக்குடி, திருவண்ணாமலை, விருதுநகர், கடலூர் மற்றும் வேலூர் ஆகியவை கம்பு சாகுபடி செய்யும் பிற முக்கிய மாவட்டங்களாகும்.

கம்புவின் மொத்த நுகர்வில் 73.4 சதவிகிதம் உணவுக்காக பயன்படுத்தப் படுகின்றது. கம்பு முக்கியமாக காலை உணவு, தானிய வகைகள், கஞ்சி, கம்மஞ்சோறு மற்றும் பொங்கிய தானியங்கள் போன்ற பல்வேறு உணவு வகைகளாகவும், கால் நடை மற்றும் கோழி தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. தற்போது கம்பு மது தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் ஐ.சி..எம்.வி 221 மற்றும் கோ(க) 29 ஆகிய முக்கிய இரகங்கள் பயிரிடப்படுகிறது.

மழை அளவைப் பொறுத்து குறிப்பாக மே – சூன் மற்றும் அக்டோபர் - நவம்பர் ஆகிய இரண்டு பருவங்களில் கம்பு பயிரிடப்படுகின்றது. குறைவான மழையின் காரணமாக கம்புவின் வரத்து விழுப்புரம் மாவட்டத்தில் குறைந்து காணப்படுகிறது. ஜனவரி மாத இறுதியில் இதன் வரத்து ஆரம்பமாகிறது. இதனை தொடர்ந்து வருடம் முழுவதும் சேமித்து வைத்து பயன்படுத்தப்படுகிறது. கம்பு உற்பத்தியில் தமிழ்நாட்டின் தேவை அதிகமாக இருப்பதினால் ஆந்திர மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

கம்பு விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 15 ஆண்டுகளாக, விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய கம்புவின் விலையை, சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அறுவடையின் போது தரமான கம்புவின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.17-18 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. சுத்தமான, பச்சை நிறமுள்ள, முழு தானிய கம்புவிற்கு நல்ல விலை கிடைக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைகளின்படி விதைப்பு முடிவுகளை எடுக்கமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641003*

*தொலைபேசி- 0422-2431405*

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*சிறுதானியங்கள் துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641003*

*தொலைபேசி- 0422-2450507*